





# SINGLE TEACHER SCHOOLS


Unit of Swami Vivekananda Rural Development Society - Established -1979

NEWS LETTER

Founder : **Brahmalin Dayananda Saraswathi**

**Shri. S. Vedantam Ji**
Chairman



**Shri. K.N. Krishnamurthy Ji**
Vice Chairman



**Dr. Shri. R. Krishnan Ji**
President



**Smt. Kamala Krishnamachari Ji**
Vice President



**Shri. S. Subramaniam Ji**
Hon. Secretary



**Shri. G. Krishnaswamy Ji**
Hon. Treasurer


**VOLUME 47** | **For Private Circulation** | **JANUARY 2026**


## INDEX


4000th TCB Inauguration - Page No 1 to 2
Certificate of Appreciation - Page No 2 to 3
Social Impact Assessment of STS - Page No 3 to 4
Acharyas Soft Skills Program - Page No 5 to 6
Hand Writing Competition - Page No 6 to 7
Dr. Rajammal's Special Training To Acharyas - Page No 8
Distribution of Diwali Dresses to STS Childrens by Students of JGHV Group of Schools - Page No 8 to 9
Distribution of T'Shirts & School Bags - Page No 9 to 10
Distribution of Nutrition Health Mix to STS Children by TVS Group of Companies - Page No 10 to 11
Mahakavi Bharathiyar - Page No 11 to 12
Chutti Madal - Page No 12 to 13
Handing Over of TCBs - Page No 14
Kai Pesi Undu... Kazhivaral Illai - Page No 14 to 15
Free Cancer Camps - Page No 16
Free Cervical Cancer Vaccination - Page No 16 to 17
Free Eye Check up Camp - Page No 17
Free Master Health Check Up - Page No 18
Office Automation Course - Page No 18 to 19
Car Driving - Page No 19
Vilakku Pooja - Page No 20




# STS HANDS OVER 4000TH TOILET CUM BATHROOM AT PALLAMANGALAM VILLAGE



Single Teacher Schools (STS), a unit of Swami Vivekananda Rural Development Society (SVRDS), proudly handed over its **4000th Toilet cum Bathroom (TCB)** to a beneficiary on Sunday, 4th January 2026, at Pallamangalam Village, Ranipet District. The landmark event witnessed the enthusiastic participation of more than 200 villagers, making the function a memorable and meaningful one.

The beneficiary, Mrs. K. Deepa, expressed her heartfelt happiness and gratitude on receiving this basic sanitation facility. She emotionally shared that until now, her family members were compelled to use open spaces for their daily needs, and the newly constructed Toilet cum Bathroom has brought dignity, safety, and hygiene to her family.

The program was graced by the presence of several dignitaries from SVRDS and STS, including SVRDS Vice Chairman Shri. K. N. Krishnamurthy, President Dr. Shri. R. Krishnan, Vice President Smt. Kamala Krishnamachari, Honorary Secretary Shri. S. Subramaniam, and Honorary Treasurer Shri. G. Krishnaswamy.

Representatives from one of the major donors, Turbo Energy Limited **(A Group concern of TVS),** namely Shri. Baranidharan and Shri. Ganesh, along with Shri. Vimal Nandan from VIS Education & Training Company and local Panchayat Leaders were also present and appreciated the sustained sanitation efforts of STS.

Speaking on the occasion, Dr. Shri. R. Krishnan, President of Single Teacher Schools, highlighted that the completion of **4000 Toilet cum Bathroom** is a significant milestone in SVRDS's mission towards rural sanitation, health, and dignity. He reaffirmed the organisation's commitment to continue serving the underprivileged and expanding the program to reach many more needy families. All the other Dignatories' speeches were great motivation to the people who were present.

## பள்ளமங்கலம் கிராமத்தில் 4000வது கழிப்பறையுடன்கூடிய குளியலறை ஒப்படைப்பு



சுவாமி விவேகானந்தா கிராம அபிவிருத்தி சங்கத்தின் (SVRDS) ஒரு பிரிவான ஓராசிரியர் பள்ளிகள் (STS) சார்பில், ராணிப்பேட்டை மாவட்டம், பள்ளமங்கலம் கிராமத்தில், 2026 ஜனவரி 4ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) **4000வது கழிப்பறையுடன்கூடிய குளியலறை (TCB)** பயனாளருக்கு பெருமையுடன் ஒப்படைக்கப்பட்டது. இவ்விழாவில் 200க்கும் மேற்பட்ட கிராம மக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

பயனாளியான திருமதி கே. தீபா அவர்கள், இந்த அடிப்படை வசதி கிடைத்ததற்கு தனது மகிழ்ச்சியையும் நன்றியையும் வெளிப்படுத்தினார். இதுவரை தனது குடும்பத்தினர் திறந்த வெளியில் இயற்கை உபாதைகளை கழித்து வந்த நிலையில், தற்போது கிடைத்த கழிப்பறையுடன்கூடிய குளியலறை அவர்களின் வாழ்க்கையில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் மரியாதையை கொண்டு வந்துள்ளதாக அவர் கூறினார்.



இந்த நிகழ்ச்சியில் SVRDS Vice Chairman திரு. கே. என். கிருஷ்ணமூர்த்தி, தலைவர் டாக்டர் திரு. ஆர். கிருஷ்ணன், துணைத் தலைவர் திருமதி கமலா கிருஷ்ணமாச்சாரி, கௌரவ செயலாளர் திரு. எஸ். சுப்ரமணியம், கௌரவ பொருளாளர் திரு. ஜி. கிருஷ்ணசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், முக்கிய நன்கொடையாளர்களில் ஒருவரான டர்போ எனர்ஜி லிமிடெட் **(TVS குழும நிறுவனமாகும்)** சார்பில் திரு. பரணிதரன், திரு. கணேஷ், மற்றும் VIS கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் சார்பில் திரு. விமல் நந்தன் உள்ளூர் பஞ்சாயத்து தலைவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு, STS நிறுவனத்தின் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சுகாதார முயற்சிகளை பாராட்டினர்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய டாக்டர் ஆர். கிருஷ்ணன், **4000வது கழிப்பறை யுடன்கூடிய குளியலறை** ஒப்படைப்பு என்பது கிராமப்புற சுகாதாரம், ஆரோக்கியம் மற்றும் மனித மரியாதைக்கான SVRDS அமைப்பின் தொடர்ச்சியான சேவைகளில் ஒரு முக்கிய மைல்கல்லாகும் எனக் குறிப்பிட்டார். எதிர்காலத்திலும் மேலும் பல ஏழை குடும்பங்களுக்கு இத்தகைய அடிப்படை வசதிகளை வழங்கும் பணியை விரிவுபடுத்துவோம் என்றும் அவர் உறுதியளித்தார்.

## CERTIFICATE OF APPRECIATION TO SVRDS BY SANKALP BEAUTIFUL WORLD



Sankalp Beautiful World, an NGO has been working on health care for the needed poor. The trust mainly focus on cancer care, which include awareness programs, vaccination, identification of persons with cancer and providing support for various needs.

Swami Vivekananda Rural Development Society is associated with them in our Cervical Cancer Vaccination programs in which they coordinate with the medical team of Madras Medical Mission (MMM) Hospital. With their coordination, we have successfully vaccinated over 2,500 Females.

On Sunday the 7th December 2025, Sankalp Beautiful World organised a program to mark their Tenth Anniversary of Social Service and the program was attended by many renowned Doctors and persons involved in social work. On that occasion, they gave a Certificate of Appreciation to SVRDS for the excellence in service. The Certificate was received by President Dr. Shri. R. Krishnan ji.

# SVRDS-க்கு பாராட்டு சான்றிதழ் வழங்கிய SANKALP BEAUTIFUL WORLD




Sankalp Beautiful World என்னும் தன்னார்வ அமைப்பு, தேவையுள்ள ஏழை மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் பணியில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. குறிப்பாக புற்றுநோய் தொடர்பான சேவைகளில் கவனம் செலுத்தி, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், தடுப்பூசி வழங்குதல், பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல் மற்றும் அவர்களுக்கு தேவையான பல்வேறு உதவிகளை வழங்குதல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

Swami Vivekananda Rural Development Society (SVRDS) இந்த அமைப்புடன் இணைந்து கர்ப்பப்பை புற்றுநோய் தடுப்பூசி வழங்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. Madras Medical Mission (MMM) மருத்துவமனை மருத்துவக் குழுவுடன் ஒருங்கிணைப்பதிலும் இவர்கள் முக்கிய பங்கு வகித்து வருகின்றனர். அவர்களின் ஒருங்கிணைப்பின் மூலம் இதுவரை 2,500 பெண்களுக்கு தடுப்பூசி வெற்றிகரமாக போடப்பட்டுள்ளது.



2025 டிசம்பர் 7, ஞாயிற்றுக்கிழமை, Sankalp Beautiful World தனது பத்து ஆண்டுகள் சமூக சேவை நிறைவு விழாவை சிறப்பாக நடத்தியது. பல பிரபல மருத்துவர்கள் மற்றும் சமூக சேவையாளர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில், SVRDS வழங்கி வரும் சிறந்த சமூக சேவைக்காக SVRDS நிறுவனத்துக்கு ஒரு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்த சான்றிதழை SVRDS தலைவர் டாக்டர். திரு. ஆர். கிருஷ்ணன் ஜி பெற்றுக்கொண்டார்.

# SOCIAL IMPACT ASSESSMENT OF SINGLE TEACHER SCHOOLS



Year on year, we are taking up Third party Independent Social Audit to evaluate the effectiveness of functioning of schools and the impact on the children and society.

For the period April 2024 - March 2025 also, this exercise has been taken up and M/s. Centre for Social Initiative and Management (CSIM) did the Audit.

They have taken **184** Schools for study and analysis.

They visited the schools, assessed the functioning of the schools. Interacted with children, Acharyas, Parents and the Teachers of the regular schools where these children are studying.

They have mentioned the various gaps in the academics children are having in the current situation and how STS helps them in addressing these gaps.

The key highlights of the report are:-

**184** STS centres audited across 5 districts with field visits and stakeholder interactions

- Over 95% of children showed improvement in academics, discipline, homework habits, and school attendance
- 96% scored better in school exams, 98.6% complete homework regularly
- Strong gains in values, respect, confidence, social skills, and sports participation





- Parents rated STS highly (4.3–4.7/5), especially Acharyas' commitment and moral education
- Acharyas showed significant improvement in teaching skills, subject knowledge, leadership, and confidence
- STS identified as a cost-effective, community-driven model bridging gaps highlighted in ASER 2024

The report strongly validates the impact, relevance, and sustainability of the STS model.

## STS பள்ளிகளின் சமூக தாக்க மதிப்பீடு (SOCIAL IMPACT ASSESSMENT OF SINGLE TEACHER SCHOOLS)



ஆண்டு தோறும், பள்ளிகளின் செயல்பாட்டு திறன் மற்றும் குழந்தைகள் மற்றும் சமூகத்தின் மீதான தாக்கத்தை மதிப்பிடுவதற்காக, மூன்றாம் தரப்பு சுயாதீன சமூக தணிக்கை (Social Audit) மேற்கொண்டு வருகிறோம்.

அதேபோல், ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரையிலான காலத்திற்கும் இந்த சமூக தணிக்கை மேற்கொள்ளப்பட்டு, M/s. Centre for Social Initiative and Management (CSIM) அமைப்பால் இது நடத்தப்பட்டது.

இந்த ஆய்விற்காக 184 STS பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு விரிவான ஆய்வு மற்றும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.



CSIM குழுவினர் பள்ளிகளை நேரில் பார்வையிட்டு, அவற்றின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்ததுடன், குழந்தைகள், ஆச்சாரியார்கள், பெற்றோர் மற்றும் இக்குழந்தைகள் பயிலும் அரசு/தனியார் பள்ளி ஆசிரியர்களுடன் கலந்துரையாடினர்.

தற்போதைய சூழலில் குழந்தைகளுக்கு கல்வி சார்ந்துள்ள பல குறைபாடுகளை அவர்கள் சுட்டிக்காட்டியதுடன், அந்த குறைபாடுகளை STS எவ்வாறு திறம்பட சரி செய்கிறது என்பதையும் விளக்கியுள்ளனர்.

அறிக்கையின் முக்கிய அம்சங்கள் :

- 5 மாவட்டங்களில் உள்ள 184 STS மையங்கள் தணிக்கை செய்யப்பட்டு, களப்பார்வை மற்றும் பங்குதாரர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது
- 95%க்கும் மேற்பட்ட குழந்தைகளில் கல்வித்திறன், ஒழுக்கம், வீட்டுப்பாடபழக்கம் மற்றும் பள்ளி வருகையில் முன்னேற்றம் காணப்பட்டது
- 96% குழந்தைகள் பள்ளித் தேர்வுகளில் மேம்பட்ட மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்; 98.6% குழந்தைகள் வீட்டுப்பாடங்களை முறையாக நிறைவேற்றுகின்றனர்
- மதிப்பீடுகள், மரியாதை உணர்வு, தன்னம்பிக்கை, சமூகத் திறன்கள் மற்றும் விளையாட்டுப் பங்கேற்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம்



- பெற்றோர்கள் STSஐ உயர்ந்த மதிப்பீட்டுடன் (5இல் 4.3 முதல் 4.7 வரை) பாராட்டியுள்ளனர், குறிப்பாக ஆச்சாரியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் நற்பண்புக் கல்வியை பாராட்டியுள்ளனர்
- ஆச்சாரியர்களின் கற்பித்தல் திறன், பாட அறிவு, தலைமைத்துவம் மற்றும் தன்னம்பிக்கையில் கணிசமான முன்னேற்றம்
- ASER 2024 அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி இடைவெளிகளை நிரப்பும், குறைந்த செலவில் செயல்படும், சமூக அடிப்படையிலான சிறந்த மாதிரியாக STS அடையாளம் காணப்பட்டுள்ளது

இந்த அறிக்கை, STS மாதிரியின் தாக்கம், பொருத்தம் மற்றும் நீடித்த நிலைத்தன்மை ஆகியவற்றை உறுதியாக நிரூபிக்கிறது.

# ACHARYAS SOFT SKILLS PROGRAM



As a motivation to Acharyas of STS, a new soft skills program was initiated from the month of August, 2025.

On 29/11/2025, Soft skills training program for acharyas was conducted at SVRDS Training Centre, Ulundai.

Sri. Raja Ravi Varma, Professor, Pondicherry University, Smt. Manjula Ponnapalli, Anthardhaari Arts Foundation, Sri. Ezhil trained our acharyas.

60 Acharyas were present out of 70. They were separated into 3 groups in 3 classrooms.

Raja Ravi Varma taught Acharyas Dance, Smt. Manjula Ponnapalli taught Music and Sri.Ezhil taught clay modeling and making models in Plaster of Paris.



Life lessons through Dance, Training students through Music, Modeling works through clay and Plaster of Paris were taught.

All the sessions were vibrant and Acharyas participated enthusiastically. 3 trainers gave an excellent feedback and appreciated Acharyas for being attentive in the class and participating in spite of rains.



Sri. J.S. Shiva Kumar - Head - Operations - STS presided over the program and addressed the gathering. He advised all the Acharyas to take it to the students. He also told that these type of Training Programs will be a crowd puller where students strength will increase, if Acharyas teach what they have learned today. At the end of the program, Acharyas gave their feedback which was very positive.

Inspection Coordinators Sri. Sankaranarayanan and Sri. Rajagopal were present during the camp.

## ஆச்சாரியர்களுக்கான மென் திறன் (Soft Skills) பயிற்சி திட்டம்



STS ஆச்சாரியர்களை ஊக்குவிக்கும் நோக்கில், 2025ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து புதிய மென் திறன் (Soft Skills) பயிற்சி திட்டம் தொடங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, 29.11.2025 அன்று SVRDS பயிற்சி மையம், உளுந்தையில் ஆச்சாரியர்களுக்கான மென் திறன் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

இந்த பயிற்சியில், பாண்டிச்சேரி பல்கலைக்கழக பேராசிரியர் திரு. ராஜா ரவி வர்மா, அந்தர்தாரி ஆர்ட்ஸ் ஃபவுண்டேஷன் சார்ந்த திருமதி மஞ்சுளா பொன்னபள்ளி மற்றும் திரு. எழில் ஆகியோர் ஆச்சாரியர்களுக்கு பயிற்சி வழங்கினர்.

மொத்தம் 70 ஆச்சாரியர்களில் 60 பேர் கலந்து கொண்டனர். அவர்கள் மூன்று வகுப்பறைகளில் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டனர்.

திரு. ராஜா ரவி வர்மா நடனம் குறித்தும், திருமதி மஞ்சுளா பொன்னபள்ளி இசை குறித்து, திரு. எழில் களிமண் (Clay) மற்றும் பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் (Plaster of Paris) மூலம் மாதிரிகள் உருவாக்கும் கலை குறித்தும் பயிற்சி அளித்தனர்.

நடனம் மூலம் வாழ்க்கைப் பாடங்கள், இசை மூலம் மாணவர்களை பயிற்றுவிக்கும் முறைகள், களிமண் மற்றும் பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் மூலம் உருவாக்கப் பணிகள் ஆகியவை கற்றுத்தரப்பட்டன.

அனைத்து அமர்வுகளும் மிகவும் உற்சாகமாக நடைபெற்றன. மழை இருந்தபோதிலும் ஆச்சாரியர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டதை பாராட்டி, மூன்று பயிற்றுநர்களும் சிறந்த கருத்துகளை தெரிவித்தனர்.



STS செயல்பாடுகள் பிரிவு தலைவர் திரு. ஜே. எஸ். சிவகுமார் அவர்கள் நிகழ்ச்சியின் தலைமை தாங்கி உரையாற்றினார். இன்றைய பயிற்சியில் கற்றுக்கொண்டவற்றை மாணவர்களிடம் கொண்டு செல்லுமாறு அனைத்து ஆச்சாரியர்களையும் அவர் அறிவுறுத்தினார். மேலும், இத்தகைய பயிற்சி திட்டங்கள் மாணவர்களை அதிகமாக ஈர்க்கும் வகையில் அமைந்து, மாணவர் எண்ணிக்கை அதிகரிக்க உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார். நிகழ்ச்சியின் முடிவில் ஆச்சாரியர்கள் தங்களின் கருத்துகளை பகிர்ந்துகொண்டனர், அவை மிகவும் நேர்மறையாக இருந்தன.

முகாமின் போது ஆய்வு ஒருங்கிணைப்பாளர்கள் திரு. சங்கரநாராயணன் மற்றும் திரு. ராஜகோபால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## HAND WRITING COMPETITION



As a motivational effort for children of STS and also to add values to their academics, our President initiated focus on the aspect of handwriting, which is very important at the young age.

Accordingly a hand writing competition was organised. Out of 9270 childrens studying in 3rd to 5th standard, 192 children were shortlisted at their school levels and participated in the program conducted on 23.11.2025 at our Skill Training Centre, Ulundai. They were accompanied by 107 Acharya and 29 Field Supervisors.



Staff of HO and Ulundai made all the arrangements in providing breakfast to all, snacks and then lunch. All children were given required stationery and provided desk to write. Passage from an English lesson for English handwriting and Tirukkural and Thiruvasagam for Tamil handwriting were provided for them to write and demonstrate their quality of handwriting.

The program, after breakfast, started with a prayer and Dr. Shri. R. Krishnan ji presided and inaugurated the program, he explained the importance of having good handwriting at the young age and suggested to all children to continuously practice good handwriting. M/s. Maveric Systems, our exiting donors joined the program - they were requested to be the judges for selection after the work of each child was scrutinized by our Field Supervisors.



For each standard, two awards, one for English writing and another for Tamil writing and the top three were selected. The awards including Certificates were distributed by President Dr. Shri. R. Krishnan ji, and the members from Maverick Systems. Also for all the children who participated, consolation prizes and certificates were issued.

The program concluded by noon and It was indeed a grand program with around 350 persons were present in total. It was also decided that this will be an annual affair.

In continuation of the motivational effort to the students studying in Single Teacher Schools at Mayavaram, our Handwriting Programme was conducted at IAS Academy Centre for students from Mayavaram-1, Sirkazhi, and Bhuvanagiri Sanches. A total of 36 participants, comprising 18 Acharyas and 18 students, took part in the competition.



Out of the 18 students, 6 students were selected for prizes based on their performance. For each Sanch, 2 prizes were awarded for outstanding performance in Tamil and English handwriting for students of Standards 3, 4, and 5. The prize winners received certificates along with gift articles.

The remaining 12 students were awarded participation certificates and school pouches in appreciation of their participation.

# கையெழுத்துப் போட்டி

STS மாணவர்களை உற்சாகப்படுத்தவும், அவர்களுடைய கல்வி மேம்பாட்டிற்கு மதிப்பைச் சேர்க்கவும், சுவாமி விவேகானந்தா கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஒரு அங்கமான ஓராசிரியர் பள்ளிகளின் தலைவர் டாக்டர். ஸ்ரீ.ஆர். கிருஷ்ணன் ஜி அவர்கள், இளம் வயதில் மிக முக்கியமான "எழுத்து" திறனை மேம்படுத்துவதில் சிறப்பு கவனம் செலுத்தும் முயற்சியை தொடங்கி வைத்தார்.



அதற்கிணங்க, எழுத்துப்போட்டி நடத்தப்பட்டது. 3ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் மொத்தம் 9,270 மாணவர்களில், பள்ளி மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 192 மாணவர்கள் இறுதி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சி 23.11.2025 அன்று எங்கள் திறன் பயிற்சி மையம், உளுந்தையில் நடைபெற்றது. இவர்களுடன் 107 ஆச்சார்யர்கள் மற்றும் 29 கள மேற்பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

தலைமை அலுவலகத்திலும், உளுந்தையிலும் பணியாற்றும் பணியாளர்கள் அனைவரும் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து, காலை உணவு, சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கினர். போட்டியில் பங்கேற்ற அனைத்து குழந்தைகளுக்கும் தேவையான எழுதுப்பொருட்கள் வழங்கப்பட்டு, எழுதுவதற்கான மேசைகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. ஆங்கில எழுத்துக்கு ஆங்கில பாடப் பகுதிகள், தமிழ் எழுத்துக்கு திருக்குறள் மற்றும் திருவாசகப் பகுதிகள் கொடுக்கப்பட்டு, குழந்தைகளின் எழுத்து அழகை வெளிப்படுத்தும் வாய்ப்பும் வழங்கப்பட்டது.

காலை உணவிற்கு பிறகு, நிகழ்ச்சி பிரார்த்தனையுடன் தொடங்கப்பட்டது. டாக்டர் திரு. ஆர். கிருஷ்ணன் ஜி தலைமை தாங்கி போட்டியை தொடங்கி வைத்தார். தனது உரையில், சிறுவயதிலேயே அழகான எழுத்து பழக்கத்தை வளர்த்துக்கொள்வது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அவர் விளக்கி, தொடர்ந்து பயிற்சி செய்யுமாறு குழந்தைகளை ஊக்குவித்தார். எங்கள் மதிப்புமிகு நன்கொடையாளர் Maveric Systems நிறுவனத்தின் உறுப்பினர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, கள மேற்பார்வையாளர்கள் முதன்மைத் திருத்தம் செய்த பிறகு இறுதி மதிப்பீட்டுக்கான நீதிபதிகளாக செயல்பட்டனர்.



ஒவ்வொரு வகுப்பிற்கும் ஆங்கில எழுத்து மற்றும் தமிழ் எழுத்து என இரண்டு பிரிவுகளில் முதல் மூன்று சிறந்த குழந்தைகள் தேர்வு செய்யப்பட்டனர். பதக்கங்களும் சான்றிதழ்களும் தலைவர் டாக்டர் திரு. ஆர். கிருஷ்ணன் ஜி மற்றும் Maveric Systems நிறுவன உறுப்பினர்கள் வழங்கினர். போட்டியில் பங்கேற்ற அனைத்து குழந்தைகளுக்கும் ஆறுதல் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சி மதியம் நிறைவடைந்தது. மொத்தம் 350 பேர் கலந்து கொண்ட மிகச் சிறப்பான மற்றும் நினைவில் நிற்கும் நிகழ்ச்சியாக இது அமைந்தது. இந்த நிகழ்ச்சி ஆண்டுதோறும் நடைபெறும் நிகழ்ச்சியாக இருக்கும் என்று முடிவெடுக்கப்பட்டது.

மயிலாடுதுறையில் உள்ள STS பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் ஊக்கமளிக்கும் முயற்சியின் தொடர்ச்சியாக எழுத்துப்போட்டி திட்டம், மயிலாடுதுறை நகரில் உள்ள "ஐஏஎஸ் அகாடமி மையத்தில்" நடத்தப்பட்டது.



இதில் மயிலாடுதுறை1, சீர்காழி மற்றும் புவனகிரி சஞ்சுகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்றனர். மொத்தம் 36 பேர் (18 ஆச்சாரியர்கள் மற்றும் 18 மாணவர்கள்) இப்போட்டியில் கலந்து கொண்டனர்.

18 மாணவர்களில், அவர்களின் செயல்திறனை அடிப்படையாகக் கொண்டு 6 மாணவர்கள் பரிசுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு சஞ்சிலும், 3, 4 மற்றும் 5ஆம் வகுப்பு மாணவர்களுக்காக தமிழ் மற்றும் ஆங்கில கையெழுத்தில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு தலா 2 பரிசுகள் வழங்கப்பட்டன. பரிசு பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களுடன் பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

# SPECIAL TRAINING TO ACHARYAS



Training courses are being conducted regularly for the Acharyas by excellent experts in education covering English, Mathematics, Tamil, Science and General knowledge.

Accordingly, Dr. Smt. R. Rajammal, 3-time winner of the President Award and an experienced Educationist, who has been preparing curricula for Single Teacher Schools and conducting training courses for Acharyas for many years.



Dr. Smt. Rajammal training program was conducted during the month of October and November 2025. Acharyas were trained and updated in syllabus. Subject wise training was conducted.

Teaching methodology, handling of students, content knowledge was taught. Acharyas participated enthusiastically and upgraded their knowledge.

# ஆச்சாரியர்களுக்கான சிறப்பு பயிற்சி



ஆங்கிலம், கணிதம், தமிழ், அறிவியல் மற்றும் பொது அறிவு ஆகிய பாடங்களை உள்ளடக்கி, கல்வித் துறையில் சிறந்து விளங்கும் நிபுணர்களால் ஆச்சாரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி, மூன்று முறை குடியரசுத் தலைவர் விருதைப் பெற்ற அனுபவமிக்க கல்வியாளரான டாக்டர் திருமதி ஆர். ராஜம்மாள் அவர்கள், ஓராசிரியர் பள்ளிகளுக்கான பாடத்திட்டங்களை உருவாக்கி, பல ஆண்டுகளாக ஆச்சாரியர்களுக்கான பயிற்சிகளை நடத்தி வருபவர் ஆவார்.



டாக்டர் திருமதி ஆர். ராஜம்மாள் அவர்களின் பயிற்சி நிகழ்ச்சி 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடைபெற்றது. இதில் ஆச்சாரியர்கள் பாடத்திட்டங்களில் பயிற்சி பெற்று, புதுப்பிக்கப்பட்டனர். பாடவாரியாக பயிற்சிகள் வழங்கப்பட்டன.

கற்பித்தல் முறைகள், மாணவர்களை கையாளும் திறன், பாட உள்ளடக்க அறிவு ஆகியவை கற்பிக்கப்பட்டன. ஆச்சாரியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, தங்களது அறிவை மேம்படுத்திக் கொண்டனர்.

# DISTRIBUTION OF DRESSES TO STS CHILDRENS ON THE OCCASION OF DIWALI, 2025 BY THE STUDENTS OF JAIGOPAL GARODIA GROUP OF SCHOOLS



We at SVRDS, are extremely thankful to the students for contributing and distribution of dresses to the STS children by Jaigopal Garodia Hindu Vidyalaya Matric Higher Secondary School (Full Set Dresses to the Girls - 48 and Boys 73 and Full set of Shirts and T'Shirt to the Girls - 77 and Boys - 69), G.K.Chetty Hindu Vidyalaya Matric Higher Secondary School (Girls - 143 Sets & 5 Tops and Boys - 84 Sets & 30 T'Shirts) and Sita Devi Garodia Matric Higher Secondary School (For Girls - 45 Sets and Boys - 45 Sets). The school children have been contributing for dresses to the STS children every year.

The children were very happy to have received the dresses on the occasion of Diwali.

## 2025 ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகையையொட்டி ஜெய்கோபல் கரோடியா பள்ளிக்குழு மாணவர்களால் STS குழந்தைகளுக்கு ஆடைகள் விநியோகம்



ஜெயகோபால் கரோடியா இந்து வித்யாலயா மெட்ரிக் உயர்நிலைப் பள்ளி (பெண்கள் – 48 செட் முழு உடைகள் மற்றும் ஆண்கள் – 73 செட் முழு உடைகள்; கூடுதலாக பெண்கள் – 77 சட்டைகள் மற்றும் டி–ஷர்ட்கள், ஆண்கள் – 69 சட்டைகள் மற்றும் டி–ஷர்ட்கள்), ஜி.கே. செட்டி இந்து வித்யாலயா மெட்ரிக் உயர்நிலைப் பள்ளி (பெண்கள் – 143 செட் முழு உடைகள் மற்றும் 5 டாப்புகள், ஆண்கள் – 84 செட் முழு உடைகள் மற்றும் 30 டி–ஷர்ட்கள்) மற்றும் சீதாதேவி கரோடியா மெட்ரிக் உயர்நிலைப் பள்ளி (பெண்கள் – 45 செட் முழு உடைகள் மற்றும் ஆண்கள் – 45 செட் முழு உடைகள்) வழங்கிய பள்ளிகளின் மாணவ, மாணவிகளுக்கு SVRDS சார்பாக, எங்கள் இதயம் கனிந்த நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.



இப்பள்ளி மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் STS குழந்தைகளுக்கான உடைகளை வழங்கும் பணியில் பங்கெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

தீபாவளி பண்டிகை நாளில் புதிய உடைகளை பெற்ற குழந்தைகள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர்.

## DISTRIBUTION OF T'SHIRTS & SCHOOL BAGS TO STS CHILDREN

In continuation of the Distribution of T'Shirts & School Bags to the children of STS, the distribution program was held in the months of October & November 2025 as per the details given below:-

| Sl.No. | Date | Village / Sanch | District | No. of Students |
|---|---|---|---|---|
| 1 | 11.10.25 | Mahendravadi | Ranipet | 405 |
| 2 | 26.10.25 | Velliyur | Tiruvallur | 379 |
| 3 | 26.10.25 | Bhuvanagiri & Sirkazhi | Mayavaram | 1203 |
| 4 | 26.10.25 | Coimbatore | Coimbatore | 690 |
| 5 | 02.11.25 | Wallajapet | Ranipet | 536 |



For the 27th & final T'Shirts & School Bags distribution program, which was held on 02.11.2025, SVRDS-STS Vice Chairman, Shri. K.N. Krishnamurthy ji presided over the program and distributed T'Shirts & School Bags.

Our Vice Chairman shared his view points and happiness about this new initiative and also appreciated the children who have performed reciting of Thirukkural, Bharathanatyam dance, Silambam by a group of girl children, storytelling. He was very happy when a 4 year old child listed out the District Names of Tamil Nadu.



We started the distribution program on 27.07.2025 and the functions were held at respective Sanches / Villages.

Along with the children and Acharyas, parents and villagers were also participated. We have distributed T'Shirts and School Bags to 21,725 children and their parents' responses have been overwhelming.

Each such programme was presided by our Respectable Members or our Donors and persons who have associated with SVRDS.

## STS குழந்தைகளுக்கு டி-ஷர்ட்கள் மற்றும் பள்ளிப் பைகள் வழங்கல்

STS குழந்தைகளுக்கு டி–ஷர்ட்கள் மற்றும் பள்ளிப் பைகள் வழங்கும் திட்டத்தின் தொடர்ச்சியாக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின்படி 2025ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் டி–ஷர்ட்கள் மற்றும் பள்ளிப் பைகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன:

| Sl.No. | Date | Village / Sanch | District | No. of Students |
|---|---|---|---|---|
| 1 | 11.10.25 | Mahendravadi | Ranipet | 405 |
| 2 | 26.10.25 | Velliyur | Tiruvallur | 379 |
| 3 | 26.10.25 | Bhuvanagiri & Sirkazhi | Mayavaram | 1203 |
| 4 | 26.10.25 | Coimbatore | Coimbatore | 690 |
| 5 | 02.11.25 | Wallajapet | Ranipet | 536 |



27வது மற்றும் இறுதி டிஷர்ட்கள் மற்றும் பள்ளிப் பைகள் வழங்கும் நிகழ்ச்சி 02.11.2025 அன்று நடைபெற்றது. இதில் SVRDS-STS துணைத் தலைவர் திரு. கே. என். கிருஷ்ணமூர்த்தி ஜி அவர்கள் தலைமையேற்று டி–ஷர்ட்கள் மற்றும் பள்ளிப் பைகளை வழங்கினார்.

இந்த புதிய முயற்சி குறித்து தனது கருத்துகளையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்த துணைத் தலைவர், திருக்குறள் பாராயணம், பாரதநாட்டிய நடனம், சிறுமிகள் குழுவினரால் நடத்தப்பட்ட சிலம்பம், கதை சொல்லல் போன்ற நிகழ்ச்சிகளில் சிறப்பாக பங்கேற்ற குழந்தைகளைப் பாராட்டினார். மேலும், நான்கு வயது குழந்தை ஒன்று தமிழ்நாட்டின் மாவட்டங்களின் பெயர்களை பட்டியலிட்டது அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.




குழந்தைகளுக்கு டி–ஷர்ட்கள் மற்றும் பள்ளிப்பைகள் வழங்கும் திட்டம் 27.07.2025 அன்று தொடங்கப்பட்டது. நிகழ்ச்சிகள் அந்தந்த சஞ்க்கள் / கிராமங்களில் நடைபெற்றன.

குழந்தைகள் மற்றும் ஆச்சாரியர்களுடன் பெற்றோர்கள் மற்றும் கிராம மக்களும் கலந்து கொண்டனர். மொத்தமாக 21,725 குழந்தைகளுக்கு டி–ஷர்ட்கள் மற்றும் பள்ளிப்பைகள் வழங்கப்பட்டன. பெற்றோர்களின் கரஒலி மிகுந்த உற்சாகம் மற்றும் பாராட்டுகளுடனும் அமைந்தது.

ஒவ்வொரு நிகழ்ச்சியையும் எங்கள் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அல்லது எங்கள் நன்கொடையாளர்கள் மற்றும் SVRDS உடன் இணைந்து செயல்பட்டவர்கள் தலைமையேற்று நடத்தினர்.

## DISTRIBUTION OF NUTRITION HEALTH MIX TO STS STUDENTS BY TVS GROUP OF COMPANIES



We are extremely grateful to M/s. Turbo Energy Limited, Real Talent Engineering Pvt. Ltd., Abi Showatech, for their generous support towards the health and well-being of the children studying in Single Teacher Schools (STS) by distributing Nutrition Health Mix for one month every time.

Earlier, Real Talent Engineering Pvt. Ltd., distributed Nutrition Health Mix to a total of 198 children from 7 Villages, namely, Ramapuram, Egnapuram, Srikalikapuram, Srikalikapuram Colony, J.J. Nagar, V. Pudur and Pudur Colony, Tiruvallur District.

On 12th November 2025, the officials from Turbo Energy Limited distributed Nutrition Health Mix to a total of 194 children from 7 Villages, namely, Perumkanchi 1 & 2, Perumkanchi Colony, Kodaikkal, Kodaikkal Colony, Kalainagar and Saraswathi Nagar, Ranipet District.

On 22.12.2025, based on our request, M/s. Turbo Energy Limited and Abi Showatech officials together visited and distributed Nutrition Health Mix to a total of 127 children from 4 Villages, namely, Aayal-2 & 3, Aayal New

Colony and Soorai, Ranipet District.

We would like to place on record, our heartfelt thanks to TVS Group of Companies for their meaningful contribution towards improving the nutritional health of rural children. Such initiatives play a vital role in strengthening the foundation for a healthier and brighter future.



## TVS குழும நிறுவனங்களின் ஆதரவுடன் STS மாணவர்களுக்கு ஆரோக்கிய ஊட்டச்சத்து வழுங்கல்



ஓராசிரியர் பள்ளிகளில் (STS) கல்வி பயிலும் குழந்தைகளின் உடல்நலம் மற்றும் நலன் மேம்பாட்டிற்காக, ஒவ்வொரு முறையும் ஒரு மாதத்திற்கு தேவையான ஊட்டச்சத்து கலவையை வழங்கி வரும் M/s. Turbo Energy Limited, Real Talent Engineering Pvt. Ltd. மற்றும் Abi Showatech நிறுவனங்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



முன்னதாக, Real Talent Engineering Pvt. Ltd., திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ராமாபுரம், ஏக்னாபுரம், ஸ்ரீகாளிகாபுரம், ஸ்ரீகாளிகாபுரம் காலனி, ஜே.ஜே. நகர், வி. புதூர் மற்றும் புதூர் காலனி ஆகிய 7 கிராமங்களைச் சேர்ந்த மொத்தம் 198 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து கலவையை வழங்கியது.

12.11.2025 அன்று, Turbo Energy Limited நிறுவன அதிகாரிகள், ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள பெரும்காஞ்சி 1 – 2, பெரும்காஞ்சி காலனி, கொடைக்கல், கொடைக்கல் காலனி, கலைநகர் மற்றும் சரஸ்வதி நகர் ஆகிய 7 கிராமங்களைச் சேர்ந்த மொத்தம் 194 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து கலவையை வழங்கினர்.

மேலும், 22.12.2025 அன்று, எங்களின் வேண்டுகோளின் பேரில் M/s. Turbo Energy Limited மற்றும் Abi Showatech நிறுவன அதிகாரிகள் இணைந்து ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள ஆயல் 2 – 3, ஆயல் புதிய காலனி மற்றும் சூரை ஆகிய 4 கிராமங்களைச் சேர்ந்த மொத்தம் 127 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து கலவையை வழங்கினர்.

கிராமப்புற குழந்தைகளின் ஊட்டச்சத்து நலனை மேம்படுத்தும் நோக்கில் வழங்கிய இத்தகைய அர்த்தமுள்ள பங்களிப்பிற்காக TVS குழும நிறுவனங்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றியை பதிவு செய்ய விரும்புகிறோம். இத்தகைய முயற்சிகள், ஆரோக்கியமானதும் ஒளிமயமானதுமான எதிர்காலத்திற்கான வலுவான அடித்தளத்தை அமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## MAHAKAVI SUBRAMANIA BHARATHIYAR (NATIONAL POET OF TAMIL NADU)



Mahakavi Subramania Bharathiyar (1882–1921) was one of the greatest poets, freedom fighters, and social reformers India has ever produced. Revered as a pioneer of modern Tamil poetry, Bharathiyar used his powerful words to awaken patriotism, self-respect, and social awareness among the people.

Born in Ettayapuram, Tamil Nadu, Bharathiyar was a child prodigy who mastered Tamil, Sanskrit, Hindi, and English at a very young age. His poems reflected intense love for the nation, devotion to freedom, and a deep concern for social equality. He fearlessly spoke against caste discrimination, untouchability, and the oppression of women, and strongly advocated women's education and empowerment.

Bharathiyar's patriotic songs such as **"Vande Mataram," "Achamillai Achamillai," and "Endru Thaniyum Indha Sudhandhira Thaagam"** continue to inspire generations. His literary works include poems, essays, short stories, and translations, all marked by clarity of thought and revolutionary spirit.

Though his life was short, Mahakavi Bharathiyar's legacy remains timeless. He is remembered not only as a poet, but as a visionary who dreamed of a free, equal, and enlightened India.

## மகாகவி சுப்பிரமணிய பாரதியார் (தமிழ்த்தாயின் தேசியக் கவிஞர்)

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் (1882–1921) இந்தியாவின் சிறந்த கவிஞர்களிலும், சுதந்திரப் போராட்ட வீரர்களிலும், சமூக சீர்திருத்தவாதிகளிலும் ஒருவராக திகழ்ந்தார். நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடியாக விளங்கிய பாரதியார், தனது கவிதைகள் மூலம் தேசப்பற்று, சுயமரியாதை மற்றும் சமூக விழிப்புணர்வை மக்களிடையே ஊட்டினார்.

தமிழ்நாட்டின் எட்டயபுரத்தில் பிறந்த பாரதியார், சிறுவயதிலேயே தமிழ், சமஸ்கிருதம், இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் சிறந்து விளங்கிய மேதையாவார். அவரது படைப்புகள் நாட்டின் சுதந்திர வேட்கையையும், சமூக சமத்துவத்தையும் பிரதிபலித்தன. சாதி வேற்றுமை, தீண்டாமை, பெண்கள் ஒடுக்குமுறை ஆகியவற்றுக்கு எதிராகத் துணிவுடன் குரல் கொடுத்தவர், பெண்கள் கல்வி மற்றும் பெண் விடுதலையை வலியுறுத்தினார்.


**“அச்சமில்லை அச்சமில்லை”**, **“வந்தே மாதரம்”**, **“என்று தணியும் இந்த சுதந்திர தாகம்”** போன்ற அவரது பாடல்கள் இன்றும் மக்களை ஊக்குவித்து வருகின்றன. கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் மற்றும் மொழிபெயர்ப்புகள் என அவரது இலக்கியங்கள் அனைத்தும் புரட்சிகர சிந்தனையால் நிறைந்தவை.

குறுகிய ஆயுளில் வாழ்ந்தாலும், மகாகவி பாரதியாரின் சிந்தனைகளும் இலக்கிய மரபும் காலத்தால் அழியாதவை. சுதந்திரம், சமத்துவம், அறிவொளி நிறைந்த இந்தியாவை கனவு கண்ட மகாகவியாக அவர் என்றும் நினைவுகூறப்படுகிறார்.


## சுட்டி மடல் CHUTTI MADAL



T. Dharshan



P. Priyadharshan, Vembakkam



R. Yuvaraj, Vembakkam



R. Yuvaraj, Vembakkam




R. Badma Loshini, Thiruvadiroyapuram



T. Dharshini Vembakkam




G. Hanshika, Maduramangalam



V. Thanishka, Vembakkam



L. Elayakumaar, Vembakkam




B. Sarveshvaran, Thiruvanamalai



V. Shamitha, Vembakkam




S. Saruvarthini, Vembakkam



R. Roshini, Thiruvadiroyapuram

# HANDING OVER OF CONSTRUCTED TOILET CUM BATHROOMS TO THE BENEFICIARIES



Under the Swachh Bharat Mission of the Prime Minister of India, Shri.Narendra Modi ji the project of construction of free individual Toilet cum Bathrooms for poor families with more girls in villages through Single Teacher Schools was launched in April 2015.



The management of Single Teacher Schools is happy to inform that we are going to hand over the **4000th** Toilet cum Bathroom on 04.01.2026.

During the months from October to December 2025, we have constructed and handed over 43 Units of Toilet cum Bathrooms to the beneficiaries as per the details given below:-

| S.No. | Village / District | Date | No.of Units | Donor Name |
|---|---|---|---|---|
| 1 | Nedumbaram / Tiruvallur | 13.10.2025 | 04 | PMI Engg. Exports Pvt. Ltd., |
| 2 | M.N.Kuppam / Chengelpet | 13.10.2025 | 15 | PMI Engg. Exports Pvt. Ltd., |
| 3 | Sothyampakkam / Thiruvannamalai | 09.11.2025 | 02 | T.K.Varalakshmi Madam |
| 4 | Sothyampakkam / Thiruvannamalai | 09.11.2025 | 01 | Ln.Shri.Sivakumar |
| 5 | M.N.Kuppam / Chengelpet | 12.11.2025 | 10 | Sreevatsa Tube Corporation |
| 6 | Thirumangalam / Kanchipuram | 24.12.2025 | 01 | Dharmamurthy Rao Bahadur Calavala Cunnan Chetty's Charities (DRBCCCC) |
| 7 | Thirumangalam / Kanchipuram | 24.12.2025 | 10 | Amrutanjan Health Care Ltd., |

# பயனாளர்களுக்கு கட்டப்பட்ட கழிப்பறையுடன் கூடிய குளியலறைகள் ஒப்படைப்பு



இந்திய பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், கிராமங்களில் பெண்கள் எண்ணிக்கை அதிகமான ஏழை குடும்பங்களுக்காக கட்டப்பட்ட இலவச கழிப்பறையுடன் கூடிய குளியலறைகள் கட்டும் திட்டம், ஓராசிரியர் பள்ளிகள் மூலம் 2015 ஏப்ரல் மாதத்தில் தொடங்கப்பட்டது.



STS நிர்வாகம் மகிழ்ச்சியுடன் தெரிவிப்பது என்னவெனில், **4000வது** கழிப்பறையுடன் கூடிய குளியலறைகள் (Toilet cum Bathrooms) 04.01.2026 அன்று ஒப்படைக்கப்பட்டது.

2025ஆம் ஆண்டு அக்டோபர் முதல் டிசம்பர் மாதங்கள் வரை, பயனாளிகளுக்காக மொத்தம் 43 கழிப்பறையுடன் கூடிய குளியலறைகள் கட்டுமானப்பணி நிறைவடைந்து பயனாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது.

# IMPORTANCE OF HAVING A TOILET FACILITY

Sanitation is one of the most basic and essential needs for a healthy and dignified life. The absence of proper toilet facilities continues to be a major challenge, particularly in rural and underprivileged areas, affecting health, economy, and overall human development.

The book titled **"Kai pesi undu… Kazhivarai illai",** strongly highlights the irony of modern society where people possess mobile phones but lack access to basic sanitation. The book explains the serious consequences of open defecation and emphasizes the urgent need to stop using open spaces for nature calls. According to the World Bank, open defecation causes an economic loss of nearly 260 billion dollars due to healthcare costs, loss of productivity, and environmental damage.

Open defecation leads to the spread of germs through air, water, flies, and soil, which in turn causes severe diseases such as dysentery, intestinal ulcers, and other infections. Even if people consume nutritious food, these diseases prevent proper absorption of nutrients, thereby affecting overall health. Most importantly, the growth

and development of children in villages are severely impacted due to repeated illnesses caused by poor sanitation.

To address this critical issue, the Government of India launched the **Swachh Bharat Abhiyan,** with the objective of eliminating open defecation and promoting individual household toilets. Through continuous awareness programs, people are being educated on the importance of hygiene, cleanliness, and dignity associated with having a toilet at home.

SVRDS President Dr. Shri. R. Krishnan ji explained about the importance of having the basic facility of Toilet cum Bathroom during his speech on 4000th Handing over of Toilet cum Bathroom function held on 04.01.2026. He used to explain about the use of Toilet cum Bathroom in every President - Acharyas Meeting.

The book also provides practical guidance on how to clean toilets safely, stressing the importance of using protective measures. It further emphasizes essential hygiene practices such as flushing after use and washing hands thoroughly, which are vital to prevent the spread of diseases.

In conclusion, having a toilet is not a luxury but a basic human necessity. Access to proper sanitation ensures better health, protects children's future, preserves dignity, and contributes significantly to the nation's development.

## கழிப்பறை வசதி இருப்பதின் முக்கியத்துவம்

சுகாதாரம் என்பது ஆரோக்கியமானவும் மரியாதையுடனும் வாழ்வதற்கான அடிப்படை மற்றும் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகும். உரிய கழிப்பறை வசதி இல்லாத நிலை, குறிப்பாக கிராமப்புறங்கள் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் இன்னும் ஒரு பெரும் சவாலாகத் தொடர்கிறது. இதன் காரணமாக மனிதர்களின் ஆரோக்கியம், பொருளாதாரம் மற்றும் மொத்த மனித முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

**"கைபேசி உண்டு கழிப்பறை இல்லை"** என்ற தலைப்பில் வெளிவந்துள்ள நூல், நவீன சமுதாயத்தின் விநோதமான நிலையை வலியுறுத்துகிறது. அதாவது, பலரிடம் கைபேசி போன்ற நவீன வசதிகள் இருந்தாலும், அடிப்படை சுகாதார வசதியான கழிப்பறை இல்லாத நிலையை இந்த நூல் சுட்டிக்காட்டுகிறது. திறந்த வெளிகளில் இயற்கை உபாதைகளை கழிப்பதால் ஏற்படும் கடுமையான விளைவுகளை விளக்கி, அந்த பழக்கத்தை உடனடியாகக் கைவிட வேண்டிய அவசியத்தை நூல் வலியுறுத்துகிறது. உலக வங்கியின் தகவலின்படி, திறந்த வெளிக் கழிப்பால் மருத்துவச் செலவுகள், உற்பத்தித் திறன் இழப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு காரணமாக சுமார் 260 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு பொருளாதார இழப்பு ஏற்படுகிறது.

திறந்த வெளிகளில் கழிப்பதால் காற்று, நீர், ஈக்கள் மற்றும் மண் வழியாக கிருமிகள் பரவி, வயிற்றுப்போக்கு, குடல் புண்கள் உள்ளிட்ட பல்வேறு தொற்று நோய்கள் ஏற்படுகின்றன. சத்தான உணவுகளை எடுத்துக் கொண்டாலும், இந்நோய்கள் காரணமாக உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் சரியாக உறிஞ்சப்படாமல், மொத்த உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக, கிராமங்களில் உள்ள குழந்தைகளின் வளர்ச்சியும் மேம்பாடும், சுகாதாரக் குறைபாடுகளால் ஏற்படும் தொடர்ச்சியான நோய்களின் காரணமாக கடுமையாக பாதிக்கப்படுகிறது.

இந்த முக்கியமான பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கில், திறந்த வெளிக் கழிப்பை முற்றிலுமாக ஒழித்து, ஒவ்வொரு இல்லத்திலும் தனிப்பட்ட கழிப்பறை அமைப்பதை ஊக்குவிக்கும் வகையில் இந்திய அரசு **"ஸ்வச்ச் பாரத் அபியான்"** திட்டத்தைத் தொடங்கியது. தொடர்ந்து மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் மூலம், சுத்தம், சுகாதாரம் மற்றும் இல்லத்தில் கழிப்பறை இருப்பதன் மரியாதை குறித்து மக்களுக்கு விளக்கப்படுகிறது.

SVRDS அமைப்பின் தலைவர் டாக்டர் ஆர். கே. கிருஷ்ணன் ஜி அவர்கள், 04.01.2026 அன்று நடைபெற்ற 4000வது கழிப்பறை மற்றும் குளியலறை ஒப்படைப்பு விழாவில் உரையாற்றும் போது, கழிப்பறையுடன்கூடியகுளியலறை போன்ற அடிப்படை வசதி இருப்பதின் அவசியத்தை விளக்கினார். மேலும், அவர் ஒவ்வொரு தலைவர்ஆச்சாரியர் கூட்டத்திலும் கழிப்பறை மற்றும் குளியலறையின் பயன்பாடு குறித்து தொடர்ந்து எடுத்துரைப்பவராக உள்ளார்.

இந்த நூலில் கழிப்பறைகளை பாதுகாப்பாக சுத்தம் செய்வது குறித்த நடைமுறை வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்துவதின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், பயன்படுத்திய பின் நீர் ஊற்றுதல் மற்றும் கைகளை நன்கு கழுவுதல் போன்ற அத்தியாவசிய சுகாதார பழக்கவழக்கங்களின் அவசியமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் நோய்கள் பரவுவதைத் தடுக்கும் முக்கியமான நடவடிக்கைகளாகும்.

முடிவாக, கழிப்பறை என்பது ஒரு ஆடம்பர வசதி அல்ல, அது ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான அடிப்படை உரிமையாகும். உரிய சுகாதார வசதிகள் கிடைப்பதன் மூலம் நல்ல ஆரோக்கியம் உறுதி செய்யப்படுகிறது, குழந்தைகளின் எதிர்காலம் பாதுகாக்கப்படுகிறது, மனித மரியாதை காக்கப்படுகிறது மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கும் இது முக்கிய பங்களிப்பாக அமைகிறது.

# FREE 77th, 78th & 79th CANCER CAMPS



In an effort to promote public health, FREE Cancer Detection Camps have been Organized since 2017. In association with Dr.Shri.Ramanan, Leading Oncologist from Apollo Hospitals, Chennai & Doctors from Cancare Foundation and Medical Team from Anderson Labs, awareness camps are being conducted in villages every month.

On 08.11.2025, 77th Cancer Camp was conducted at Balakrishnapuram Village, Ranipet District, sponsored by GodB Tech Private Limited. Dr. Kanimozhi of Cancare Foundation briefed about the camp. Totally 160 villagers were screened.

Field Supervisor Mr. Krishnamurthy and Inspection Coordinator Mr. A.R. Sankaranarayan were present during the camp.



Similarly, on 13.12.2025, 78th Cancer Camp was conducted at Ananthapuram Village, Mosur Sanch. Totally 70 villagers were screened.

Field Supervisor Ms. Vinayagi and Inspection Coordinator Mr. A.R. Sankaranarayanan were present during the camp.

On 27.12.2025, 79th Cancer Camp was held at Thandalam village, Ranipet District. 107 Villagers were screened.

Field Supervisor Mr. Krishnamurthy and Inspection Coordinator Mr.A.R.Sankaranarayan were present during the camp.

# இலவச 77வது, 78வது மற்றும் 79வது புற்றுநோய் முகாம்கள்



பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன், 2017ஆம் ஆண்டிலிருந்து இலவச புற்றுநோய் கண்டறிதல் முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை அப்போலோ மருத்துவமனையின் முன்னணி புற்றுநோய் நிபுணரான டாக்டர் திரு. ரமணன் அவர்களுடன் இணைந்து, Cancare Foundation மருத்துவர்கள் மற்றும் ஆண்டர்சன் லேப்ஸ் மருத்துவக் குழுவின் ஒத்துழைப்புடன், ஒவ்வொரு மாதமும் கிராமங்களில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

08.11.2025 அன்று, ராணிப்பேட்டை மாவட்டம், பாலகிருஷ்ணாபுரம் கிராமத்தில் GodB Tech Private Limited நிறுவனத்தின் ஆதரவுடன் 77வது புற்றுநோய் முகாம் நடத்தப்பட்டது. Cancare Foundation டாக்டர் கனிமொழி அவர்கள் முகாமைப் பற்றி விளக்கினார். மொத்தம் 160 கிராமவாசிகள் பரிசோதனை செய்யப்பட்டனர்.

இந்த முகாமின் போது, கள மேற்பார்வையாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஆய்வு ஒருங்கிணைப்பாளர் திரு. ஏ.ஆர். சங்கரநாராயணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதேபோல், 13.12.2025 அன்று, மோசூர் சஞ்ச், ஆனந்தபுரம் கிராமத்தில் 78வது புற்றுநோய் முகாம் நடத்தப்பட்டது. மொத்தம் 70 கிராமவாசிகள் பரிசோதனை செய்யப்பட்டனர்.



இந்த முகாமின் போது, கள மேற்பார்வையாளர் திருமதி விநாயகி மற்றும் ஆய்வு ஒருங்கிணைப்பாளர் திரு. ஏ.ஆர். சங்கரநாராயணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

27.12.2025 அன்று, ராணிப்பேட்டை மாவட்டம், தண்டலம் கிராமத்தில் 79வது புற்றுநோய் முகாம் நடைபெற்றது. மொத்தம் 107 கிராமவாசிகள் பரிசோதனை செய்யப்பட்டனர்.

இந்த முகாமின் போது, கள மேற்பார்வையாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஆய்வு ஒருங்கிணைப்பாளர் திரு. ஏ.ஆர். சங்கரநாராயணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# FREE CERVICAL CANCER VACCINATION CAMP



On 26.10.2025, 19th Cervical Cancer Vaccination Camp was conducted at SVRDS Training Centre, Ulundai, sponsored by Malladi Drugs & Pharmaceuticals Limited.

Shri. Anil Kulkarni ji, Board Member of Sankalp Beautiful World presided over the camp.

86 girls aged between 9 years and 29 were vaccinated.

# இலவச கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோய் தடுப்பூசி முகாம்



26.10.2025 அன்று, மல்லாடி டிரக்ஸ் – பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிதியுதவியுடன், உளுந்தையில் உள்ள SVRDS பயிற்சி மையத்தில் 19வது கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோய் தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டது.

Sankalp Beautiful World, Board Member Shri. Anil Kulkarni Ji முகாமுக்கு தலைமை தாங்கினார்.

9 வயது முதல் 29 வயது வரையிலான 86 சிறுமிகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

# FREE EYE CHECK UP CAMPS



SVRDS through Single Teacher Schools (STS) conducts Free Eye Check Up Camps sponsored by Corporates to ensure the villagers where STS are functioning have their tested. Spectacles are provided and cataract surgeries are done for the needed public as per the Doctors advice.


M/s. Sankara Nethralaya, Chennai visits the camps with Ophthalmologists Doctors, Technicians with required equipment for carrying out advanced testing.

| Camp No. | Village | Sanch / District | No. of Villagers Screened | Cataract Surgery | Spectacles Recommended |
|---|---|---|---|---|---|
| 134 | KUNNAM | SRIPERUMBUDUR-4 | 85 | 13 | 57 |
| 135 | ORATHUR | THIRUVALANGADU-2 | 111 | 22 | 71 |
| 136 | PUDUMAVILANGAI | SRIPERUMBUDUR-1 | 110 | 18 | 72 |

The above Eye Check Up Camps are supported by M/s. Saint Gobain India Pvt. Ltd.

Respective Sanch Field Supervisors along with Inspection Coordinator Mr. Sankara Narayanan were present during the camps.

# இலவச கண் பரிசோதனை முகாம்கள்



SVRDS, ஓராசிரியர் பள்ளிகள் (STS) மூலம், நிறுவனங்களின் ஆதரவுடன் இலவச கண் பரிசோதனை முகாம்களை நடத்தி வருகிறது. STS செயல்பட்டு வரும் கிராமப்புற மக்களின் கண்கள் பரிசோதிக்கப்படுவதை உறுதி செய்வதே இம்முகாம்களின் நோக்கமாகும். மருத்துவர் ஆலோசனைப்படி தேவையுள்ளவர்களுக்கு கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டு, கண்புரை (Cataract) அறுவை சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

சென்னை சங்கரா நேத்ராலயாத்விலிருந்து கண் மருத்துவர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் தேவையான நவீன பரிசோதனை உபகரணங்களுடன் முகாம்களுக்கு வருகை தந்து மேம்பட்ட கண் பரிசோதனைகளை மேற்கொள்கிறார்கள்.



மேற்கண்ட இலவச கண் பரிசோதனை முகாம்களுக்கு M/s. Saint Gobain India Pvt. Ltd. நிறுவனம் ஆதரவளிக்கிறது.

மேற்கண்ட முகாம்களின் போது சம்பந்தப்பட்ட சஞ்ச்களின் கள மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆய்வு ஒருங்கிணைப்பாளர் திரு. சங்கர நாராயணன் அவர்களும் உடனிருந்தார்.

# FREE MASTER HEALTH CHECK UP CAMPS



Single Teacher Schools is conducting Free Master Health Check-up Camps every month from January 2024 in collaboration with Kola Saraswathi Samaj Health Centre, Purasaiwalkam, Chennai on the idea of its President Dr. Shri. R. Krishnan ji.

In continuation of the same, during the months from October to December 2025 Free Master Health Check up camps was conducted as per the details given below:-



| Date | Sanch / District | No.of Beneficiaries |
|---|---|---|
| 26.10.2025 | Kodaikkal / Tiruvallur | 130 |
| 30.11.2025 | Tiruttani / Tiruvallur | 122 |
| 28.12.2025 | Thiruvalangadu / Tiruvallur | 133 |

The main objective of this project is to create awareness about the importance of physical health among rural people and to detect and prevent diseases at an early stage. A team of doctors and health experts from Kola Saraswathi Samaj Health Centre conducted general medical examinations, blood tests, blood pressure checks, blood sugar level tests, and Body Mass Index (BMI) assessments.

# இலவச முழு உடல் பரிசோதனை முகாம்கள்



சென்னை, புரசைவாக்கத்தில் உள்ள கோலா சரஸ்வதி சமாஜ் சுகாதார மையத்துடன் இணைந்து, ஓராசிரியர் பள்ளிகள் மூலம் ஜனவரி 2024 முதல் மாதந்தோறும் முழு உடல் பரிசோதனை முகாம்களை நடத்தி வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் டிசம்பர் மாதங்களுக்கிடையில் இலவச முழுமையான மருத்துவ பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டன.



இந்த திட்டத்தின் நோக்கம் கிராம மக்களிடையே உடல் நலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தடுப்பது ஆகும். கோலா சரஸ்வதி சமாஜ் ஹெல்த் சென்டர் மருத்துவர்கள் மற்றும் சுகாதார நிபுணர்கள் கொண்ட குழு, பொதுவான உடல் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, இரத்த அழுத்தம், சர்க்கரை அளவு மற்றும் உடல் நிறை குறியீடு (BMI) போன்ற பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

# OFFICE AUTOMATION COURSE



An Office Automation Course was conducted at the SVRDS Training Centre, Ulundai, from 1st December to 5th December 2025. The program was organized with the objective of enhancing computer and office-related skills among the participants.

A total of 15 students attended the course and successfully completed the training. During the course period, the students were trained in various office automation tools and applications, which will be helpful for their academic and professional growth.

Following the completion of the training, online examinations were conducted on 13th December 2025 at Ulundai. The examination was conducted by an Examiner from VIS Academy, Vellore, ensuring proper assessment and evaluation of the students' learning outcomes.

The program was well received by the students and proved to be beneficial in improving their technical and practical knowledge in office automation.

## அலுவலக தானியக்கப் பயிற்சி (OFFICE AUTOMATION COURSE)



SVRDS பயிற்சி மையம், உளுந்தையில் 01.12.2025 முதல் 05.12.2025 வரை அலுவலக தானியக்கப் பயிற்சி (Office Automation Course) வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சியின் முக்கிய நோக்கம், மாணவர்களின் கணினி மற்றும் அலுவலக சார்ந்த திறன்களை மேம்படுத்துவதாகும்.

இந்தப் பயிற்சியில் 15 மாணவர்கள் கலந்து கொண்டு, பயிற்சியை முழுமையாக முடித்தனர். பயிற்சி காலத்தில், அலுவலக தானியக்கத்திற்கு தேவையான பல்வேறு மென்பொருள் பயன்பாடுகள் குறித்து மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. இது அவர்களின் கல்வி மற்றும் தொழில்முன்னேற்றத்திற்கு பயனுள்ளதாக அமைந்தது.



பயிற்சி நிறைவடைந்ததன் பின்னர், 13.12.2025 அன்று உளுந்தையில் ஆன்லைன் தேர்வுகள் நடத்தப்பட்டன. வேலூர் VIS அகாடமியைச் சேர்ந்த தேர்வாளர் தேர்வுகளை நடத்தி, மாணவர்களின் திறன்களை மதிப்பீடு செய்தார்.

இந்தப் பயிற்சி மாணவர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், அவர்களின் தொழில்நுட்ப மற்றும் நடைமுறை அறிவை மேம்படுத்த உதவியாக அமைந்தது.

## 31st BATCH OF WOMEN CAR DRIVING TRAINING



The 31st Batch of Women Car Driving Training Programme with License, sponsored by Donors of **India Development and Relief Fund, USA,** was held on 12.12.2025 to 25 fishermen community women.



SVRDS - STS President, Dr. Shri. R. Krishnan ji, Dr. Shri. R. Nataraj, IPS (Past President - SVRDS) and Shri. D. Rajkumar - Donor Relations have participated in the program.

We have so far trained 775 such women drivers with license.

## 31வது பெண்கள் கார் ஓட்டுநர் பயிற்சி



**அமெரிக்காவைச் சேர்ந்த இந்திய வளர்ச்சி மற்றும் நிவாரண நிதி (India Development and Relief Fund, USA)** வழங்குநர்களால் ஆதரவு அளிக்கப்பட்ட 25 மீனவ சமூகப் பெண்களுக்கு ஓட்டுநர் உரிமத்துடன் 31வது கார் ஓட்டுநர் பயிற்சித் திட்டம் 11.12.2025 அன்று நடைபெற்றது.




SVRDS-STS தலைவர் டாக்டர். ஸ்ரீ. ஆர். கிருஷ்ணன் ஜி, டாக்டர். ஸ்ரீ. ஆர். நடராஜ், ஐபிஎஸ் (முன்னாள் தலைவர் SVRDS) மற்றும் ஸ்ரீ. டி. ராஜ்குமார் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இதுவரை 775 பெண்களுக்கு ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய பயிற்சியை நாங்கள் அளித்துள்ளோம்.

# VILAKKU POOJA ON THE BANKS OF PONDS DESILTED BY SVRDS-STS

On the banks of the desilted ponds, Vilakku Pooja is being conducted by SVRDS – STS from the month of January 2025.

In the months of October to December 2025, Vilakku Pooja was conducted on 06.10.2025, 05.11.2025 and 04.12.2025 in 4 different places as per the details given below:-





| Sl. No. | Pond Name | Village / Sanch | District |
|---|---|---|---|
| 01. | Raghavanayadu Kuppam | Ammaiyarkuppam | Tiruvallur |
| 02. | Nerinjanthangal | Nerinjanthangal | Ranipet |
| 03. | Dusi | Dusi | Thiruvannamalai |
| 04. | Polipakkam | Salai | Ranipet |

# SVRDS-STS-ஆல் தூர்வாரப்பட்ட குளங்களின் கரைகளில் விளக்கு பூஜை



தூர்வாரப்பட்ட குளங்களின் கரைகளில், ஜனவரி 2025 முதல் SVRDS - STSஆல் விளக்கு பூஜை நடத்தப்பட்டு வருகிறது.

2025ஆம் ஆண்டு அக்டோபர் முதல் டிசம்பர் மாதங்கள் வரை, விளக்கு பூஜை 06.10.2025, 05.11.2025 மற்றும் 04.12.2025 ஆகிய தேதிகளில் 4 வேறு வேறு இடங்களில் நடத்தப்பட்டது.




## BANK DETAILS FOR INDIA

Account in the Name of : **Swami Vivekananda Rural Development Society**
Bank Name with Branch : AXIS BANK LTD
Branch Address : No.13-A, Maloni Street, T. Nagar, Chennai - 600 017.
Code : 1594
Account No : SB A/c. 082010100297851
IFSC Code : UTIB0001594
MICR No. : 600211053




## BANK DETAILS FOR NRI



Account in the Name of : **Swami Vivekananda Rural Development Society**
Bank Name with Branch : State Bank of India, New Delhi Main Branch,
Branch Address : FCRA Cell, 4th Floor, 11 Sansad Marg, New Delhi - 110001.
Account No : 40124775527 (FCRA Savings Account)
Branch Code : 00691
IFSC Code : SBIN0000691
SWIFT CODE : SBININBB104
PAN No. : AAATS4092E


Published by

# SINGLE TEACHER SCHOOLS

**Unit of Swami Vivekananda Rural Development Society - Established -1979**



**Registered Office :** 12(43), Ramanujam Street, T. Nagar, Chennai - 600 017. **Tel :** 91-44-2433 7640

**Admin. Office :** Flat No.1, "**NIVEDHA'S PATTU GOPALAN**", 15/4, West Road, West CIT Nagar, Nandanam, Chennai - 600 035.

**Phone :** +91-44-4350 8281 / 73388 63412 **E-mail :** admin@singleteacherschools.org


SRI RAGHAVENDRA SCREENS @ 98411 54688

**50% Tax Exemption under Section 80G of IT Act**